# النحو الواضح

الابتدائية الجزء الاول مع الترجمة باللغة التاملية

# அந்நஹ்வுல் வாழிஹ்

தொடக்க நிலை இரண்டாம் பாகம் தமிழாக்கம்

1

அரபியில்

அலீ அல்ஜாரிம், முஸ்தஃபா அமீன்

தமிழில்

மவ்லவி M. ஷேக் தாவூது மஹ்ழரி பாஜில் ஜமாலி M.A.,

வெளியீடு

**UMM AL-QURA ACADEMY, SINGAPORE**

ummalqurasg@gmail.com | www.uqasg.com

بسم الله الرحمن الرحيم

# النحو الواضح

الابتدائية

الجزء الاول مع الترجمة باللغة التاملية

# அந்நஹ்வுல் வாழிஹ்

தொடக்க நிலை தமிழாக்கம்

**முதல் பாகம்**


அரபியில்

அலீ அல்ஜாரிம், முஸ்தஃபா அமீன்

தமிழில்

மவ்லவி **M. ஷேக் தாவூது** மஹ்ழரி பாஜில் ஜமாலி **M.A.,**

பேராசிரியர், ஜமாலிய்யா அரபிக் கல்லூரி, பெரம்பூர், சென்னை 12



வெளியீடு

**UMM AL-QURA ACADEMY, SINGAPORE**

ummalqurasg@gmail.com | www.uqasg.com

புத்தக விபரம்

பெயர் : **அந்நஹ்வுல் வாழிஹ்**

தமிழாக்கம் : **M. ஷேக் தாவூது** **மஹ்ழரி பாஜில் ஜமாலி M.A.,**

பக்கங்கள் : 56

உரிமை : UMM AL-QURA ACADEMY, SINGAPORE

வடிவமைப்பு : தோழமை கிராஃபிக்ஸ், 9566349786

**வெளியீடு:**

**UMM AL-QURA ACADEMY, SINGAPORE**

ummalqurasg@gmail.com | www.uqasg.com




யா அல்லாஹ் எனது கல்வி ஞானத்தை
அதிகப்படுத்துவாயாக!

# முன்னுரை

## புகழனைத்தும் இறைவனுக்கே!

இறைவனின் சாந்தியும் சமாதானமும் நமது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீதும் நபிமார்கள், ஸஹாபாக்கள், இமாம்கள், நல்லோர்கள் மற்றும் நம் அனைவரின் மீதும் உண்டாவதாக! ஆமீன்!

அந்நஹ்வுல் வாழிஹ் (தெளிவான இலக்கணம்) எனும் அரபு நூலை எகிப்து நாட்டு அறிஞர்களான அலி அல்ஜாரிம் மற்றும் முஸ்தஃபா அமீன் ஆகியோர் தொகுத்துள்ளார்கள். (அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலி வழங்குவானாக! ஆமீன்) அல் இப்திதாயிய்யா (முதலாம் நிலை) மூன்று பாகங்களாகவும். அத்தானவிய்யா (இரண்டாம் நிலை) மூன்று பாகங்களாகவும் தொகுக்கப்பட்டுள்ளது.

**قَاعِدَةٌ** என்னும் அடிப்படை இலக்கண சட்டம், உதாரணங்கள், ஆய்வு, பயிற்சி என இலகுவான முறையில் அமைந்திருப்பது இந்த கிதாபின் சிறப்பு அம்சங்களாகும்.

சென்னை பல்கலைக் கழகத்தின் சார்பில் நடத்தப்படும் அப்ழலுல் உலமா முதல் வருட பாடத்திட்டத்தில் அல் இப்திதாயிய்யா முதல் பாகமும் இரண்டாம் வருட பாடத்திட்டத்தில் இரண்டு மற்றும் மூன்றாம் பாகமும் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. மேலும் அரபு மத்ரஸாக்களின் பாடத்திட்டத்திலும் உள்ளன.

இந்த கிதாபை சுருக்கமாக அடிப்படை இலக்கணச் சட்டங்கள், உதாரணங்கள், உதாரணங்களில் உள்ள தனித்தனி வார்த்தைகளுக்கு தனித்தனி அர்த்தங்கள் மற்றும் உதாரணங்களை மேற்கோள் காட்டி விளக்கம் என அனைவருக்கும் புரியும் படி எளிமையாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

(குறிப்பு: இதன் அரபு கிதாபில் உள்ள பயிற்சிகளை (தம்ரீன்) நன்கு பயிற்சி எடுத்துக் கொண்டால் உங்கள் திறனை மென்மேலும் வளர்த்துக் கொள்ள முடியும்.)

இப்புத்தகம் அப்ழலுல் உலமா பயிலும் மாணவர்கள் மற்றும் அரபு

இலக்கணத்தை உதாரணங்களோடு படித்து தெரிந்து கொள்ள விரும்பும் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் இதனை மொழிபெயர்ப்புச் செய்துள்ளேன்.

ஆலோசனை வழங்கி ஆர்வமூட்டிய எனது ஆசிரியப் பெருந்தகை ஜமாலிய்யா அரபிக் கல்லூரி பேராசிரியர் மவ்லவி M. **அப்துர் ரஹ்மான் பாஜில் பாகவி** M.A., அவர்களுக்கும், இந்நூல் பிழைகளின்றி சிறப்பாக வெளிவர எழுத்துக்களையும் எண்ணங்களையும் சரிசெய்து ஆக்கமும் ஊக்கமும் தந்த எனது ஆசிரியப் பெருந்தகை சென்னை பல்கலைக் கழக பேராசிரியர் **டாக்டர்** V.S. **அன்வர் பாதுஷாஹ் உலவி** M.A., M.Phil., Ph.D., அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், எல்லாப் பொறுப்புகளையும் ஏற்று அனைத்து விதங்களிலும் ஒத்துழைப்பு நல்கிய தோழமை பதிப்பகத்தாருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதோடு, இதுபோன்ற இன்னும் மக்களுக்கு பயனுள்ள பல நூல்கள் இப்பதிப்பகத்தின் மூலம் வெளிவர நானும் துஆ செய்கின்றேன். உங்களது துஆவில் எங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

**மொழி பெயர்ப்பாளர்**

**மவ்லவி M. ஷேக் தாவூது மஹ்ழரி பாஜில் ஜமாலி M.A.,**

**பேராசிரியர், ஜமாலிய்யா அரபுக் கல்லூரி, பெரம்பூர், சென்னை 12**

**Mobile: 97899 02272**

## கவனிக்க...!

## اِعْرَابٌ (உயிர்க்குறி)களும் عَلَامَةٌ (அடையாளக் குறியீடு)களும்

مُعْرَبٌ மற்றும் مَبْنِيٌّ உடைய பாடம் பின்பு கூறப்படும். مُعْرَبٌ உடைய اِعْرَابٌ (உயிர்க்குறி)கள் رَفْعٌ، نَصْبٌ، جَرٌّ، جَزْمٌ ஆகியவையாகும்.

مُعْرَبٌ உடைய பாடத்தில்

رَفْعٌ உடைய அடையாளமாக ضَمَّةٌ (ـٌ) (ـُ) வரும்.

نَصْبٌ உடைய அடையாளமாக فَتْحَةٌ (ـً) (ـَ) வரும்.

جَرٌّ உடைய அடையாளமாக كَسْرَةٌ (ـٍ) (ـِ) வரும்.

جَزْمٌ உடைய அடையாளமாக سُكُوْنٌ (ـْ) வரும்.

இவற்றுக்கு اَصْلِيَّةٌ (அசல்) ஆன அடையாளங்கள் எனக் கூறப்படும்.

வேறு சில அடையாளங்களும் வரும். அவற்றுக்கு نَائِبٌ (பகரமான) அடையாளங்கள் எனக் கூறப்படும். அவற்றை அதற்குரிய பாடத்தில் பின்பு காணலாம்.

مَبْنِيٌّ உடைய நிலைகள் நான்கு வகைப்படும். அவை:

ضَمٌّ (ـُ)

فَتْحٌ (ـَ)

كَسْرٌ (ـِ)

سُكُوْنٌ (ـْ)

வேறு சில நிலைகளும் வரும். அவற்றை அதற்குரிய பாடத்தில் பின்பு காணலாம். மேற்கூறிய விஷயங்களை படித்து புரிந்து கொண்டால் அடுத்து வரக்கூடிய பாடங்களை புரிந்து கொள்வதற்கு இலகுவாக இருக்கும். இன்ஷா அல்லாஹ்...

# உள்ளே...

| பக்கம் எண் | தலைப்பு | பாடம் |
|---|---|---|
| 8 | اَلْجُمْلَةُ الْمُفِيْدَةُ | الدرس – ١ |
| 10 | أَجْزَاءُ الْجُمْلَةِ | الدرس – ٢ |
| 13 | اَلْفِعْلُ الْمَاضِي | الدرس – ٣ |
| 15 | اَلْفِعْلُ الْمُضَارِعُ | الدرس – ٤ |
| 18 | فِعْلُ الْأَمْرِ | الدرس – ٥ |
| 20 | اَلْفَاعِلُ | الدرس – ٦ |
| 22 | اَلْمَفْعُوْلُ بِهِ | الدرس – ٧ |
| 24 | اَلْمُوَازَنَةُ بَيْنَ الْفَاعِلِ وَالْمَفْعُوْلِ بِهِ | الدرس – ٨ |
| 26 | اَلْمُبْتَدَأُ وَالْخَبَرُ | الدرس – ٩ |
| 28 | اَلْجُمْلَةُ الْفِعْلِيَّةُ | الدرس – ١٠ |
| 30 | اَلْجُمْلَةُ الْاِسْمِيَّةُ | الدرس – ١١ |
| 32 | نَصْبُ الْفِعْلِ الْمُضَارِعِ | الدرس – ١٢ |
| 33 | جَزْمُ الْفِعْلِ الْمُضَارِعِ | الدرس – ١٣ |
| 41 | رَفْعُ الْفِعْلِ الْمُضَارِعِ | الدرس – ١٤ |
| 43 | كَانَ وَاَخَوَاتُهَا | الدرس – ١٥ |
| 48 | إِنَّ وَاَخَوَاتُهَا | الدرس – ١٦ |
| 52 | جَرُّ الْإِسْمِ | الدرس – ١٧ |
| 55 | اَلنَّعْتُ | الدرس – ١٨ |

# اَلْجُمْلَةُ الْمُفِيْدَةُ
# பயனுள்ள வாக்கியம்

اَلْقَوَاعِدُ:

اَلتَّرْكِيبُ اَلَّذِي يُفِيدُ فَائِدَةً تَامَّةً يُسَمَّى جُمْلَةً مُفِيدَةً، وَيُسَمَّى أَيْضًا كَلَامًا.

اَلْجُمْلَةُ الْمُفِيدَةُ قَدْ تَتَرَكَّبُ مِنْ كَلِمَتَيْنِ، وَقَدْ تَتَرَكَّبُ مِنْ أَكْثَرَ، وَكُلُّ كَلِمَةٍ فِيهَا تُعَدُّ جُزْءًا مِنْهَا.

**சட்டங்கள்:**

முழுமையான அர்த்தங்களை தருகிற வார்த்தைகளின் இணைப்பிற்கு ஜூம்லா முஃபீதா (பலன் தரும் வாக்கியம்) என கூறப்படும். மேலும் இதற்கு كَلَامٌ என்றும் கூறப்படும்

பலன் தரும் வாக்கியம் என்பது இரண்டு மற்றும் இரண்டுக்கும் மேற்பட்ட வார்த்தைகளின் இணைப்பாகும்.

ஒவ்வொரு வார்த்தையும் வாக்கியத்தின் ஒரு பகுதியாகும்.

**உதாரணங்கள்** | **الأمثلة :**

| | |
|---|---|
| 1. தோட்டம் அழகாக உள்ளது | ١– اَلْبُسْتَانُ جَمِيْلٌ |
| 2. சூரியன் உதயமாகிறது | ٢– اَلشَّمْسُ طَالِعَةٌ |
| 3. அலி ரோஜா பூவை நுகர்ந்தான் | ٣– شَمَّ عَلِيٌّ وَرْدَةً |
| 4. முஹம்மது பூவைப் பறித்தான் | ٤– قَطَفَ مُحَمَّدٌ زَهْرَةً |
| 5. மீன் தண்ணீரில் வாழும் | ٥– يَعِيْشُ السَّمَكُ فِي الْمَاءِ |
| 6. பேரிச்ச மரம் மிஸ்ரு நாட்டில் அதிகமாகிறது. (அதிகமாக விளைகிறது) | ٦– يَكْثُرُ النَّخِيلُ فِي مِصْرَ |

## தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்

| | | | |
|---|---|---|---|
| பூ | زَهْرَةٌ | தோட்டம் | اَلْبُسْتَانُ |
| வாழும்/வாழ்வான் | يَعِيْشُ | அழகானது | جَمِيْلٌ |
| மீன் | اَلسَّمَكُ | சூரியன் | اَلشَّمْسُ |
| இல் | فِي | உதயமாகிறது | طَالِعَةٌ |
| தண்ணீர் | اَلْمَاءُ | நுகர்ந்தான் | شَمَّ |
| அதிகமாகும் | يَكْثُرُ | ரோஜா பூ | وَرْدَةٌ |
| பேரிச்சமரம் | اَلنَّخِيْلُ | பறித்தான் | قَطَفَ |

**விளக்கம்:**

மேலுள்ள உதாரணங்களில் முதல் உதாரணத்தில் இரண்டு வார்த்தைகள் வந்துள்ளன. அவை اَلْبُسْتَانُ மற்றும் جَمِيْلٌ என்பதாகும்.

இந்த இரண்டு வார்த்தைகளும் சேர்ந்து ஒரு வாக்கியமாக அமைந்து தோட்டம் அழகானது என்கின்ற முழுமையான அர்த்தத்தைத் தருகிறது.

இது போன்றுதான் மற்ற உதாரணங்களிலும் இரண்டு வார்த்தைகள் அல்லது அதிகமான வார்த்தைகள் சேர்ந்து ஒரு வாக்கியமாக அமைந்து முழுமையான அர்த்தத்தைத் தருகிறது.

பெயர்ச்சொல்லைக் கொண்டு ஒரு வாசகம் ஆரம்பமாகும்போது அதன் ஆரம்பத்தில் ال (அலிஃப் லாம்) வரும்.

உ.ம். اَلْبُسْتَانُ جَمِيْلٌ

اَلشَّمْسُ طَالِعَةٌ

-------------------------

# أَجْزَاءُ الْجُمْلَةِ

## வாக்கியப் பிரிவுகள்

اَلْقَوَاعِدُ:

اَلْكَلِمَةُ ثَلَاثَةُ أَنْوَاعٍ: اِسْمٌ، وَفِعْلٌ، وَحَرْفٌ.

أ- فَالْاِسْمُ: كُلُّ لَفْظٍ يُسَمَّى بِهِ إِنْسَانٌ، أَوْ حَيَوَانٌ، أَوْ نَبَاتٌ، أَوْ جَمَادٌ أَوْ أَيُّ شَيْءٍ آخَرَ.

ب- وَالْفِعْلُ: كُلُّ لَفْظٍ يَدُلُّ عَلَى حُصُوْلِ عَمَلٍ فِي زَمَنٍ خَاصٍّ.

ج- وَالْحَرْفُ: كُلُّ لَفْظٍ لَا يَظْهَرُ مَعْنَاهُ كَامِلًا إِلَّا مَعَ غَيْرِهِ.

**சட்டங்கள்:**

அரபு இலக்கணத்தில் كَلِمَةٌ (கலிமா) என்றால் மூன்று வகைகளுக்கு சொல்லப்படும்.

அவைகள்:

1. اِسْمٌ (இஸ்மு) எனும் பெயர்ச்சொல்.

   பெயர்ச்சொல் என்பது ஒரு மனிதன் அல்லது விலங்கினம் அல்லது தாவரம் அல்லது உயிரற்ற பொருள் அல்லது ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல்லாகும்.

2. فِعْلٌ (பிஃலு) எனும் வினைச்சொல்.

   குறிப்பிட்ட ஒரு காலத்தில் நடைபெறும் ஒரு செயலைக் குறிக்கும்.

3. حَرْفٌ (ஹர்ஃப்) எனும் இடைச்சொல்

   வேறொரு வார்த்தையோடு சேரும்போதுதான் இதற்கு அர்த்தம் வரும். தனித்து அர்த்தம் வராது.

**உதாரணங்கள்** **الأمثلة :**

| | |
|---|---|
| 1. இப்றாஹீம் குதிரையில் சவாரி செய்தான் | ١– رَكِبَ إِبْرَاهِيمُ الْحِصَانَ |
| 2. இஸ்மாயீல் பூனையோடு விளையாடுகிறான்/ விளையாடுவான் | ٢– يُدَاعِبُ إِسْمَاعِيلُ الْقِطَّ |
| 3. விவசாயி கோதுமையை அறுவடை செய்கிறார்/ செய்வார். | ٣– يَحْصُدُ الْفَلَّاحُ الْقَمْحَ |
| 4. ஆடு அவரையையும் வாற்கோதுமையையும் சாப்பிடுகிறது/சாப்பிடும் | ٤– تَأْكُلُ الشَّاةُ فُولًا وَشَعِيرًا |
| 5. உபதேசத்தைக் கேட்டேன் | ٥– سَمِعْتُ النَّصِيحَةَ |
| 6. ஒளி அறையில் பரவுகிறது/பரவும் | ٦– يَسْطَعُ النُّورُ فِي الْحُجْرَةِ |
| 7. தண்ணீரின் மீது கப்பல் செல்கிறது/ செல்லும் | ٧– تَجْرِي السَّفِينَةُ عَلَى الْمَاءِ |
| 8. பயணத்தை விரும்புகிறாயா?/விரும்புவாயா? | ٨– هَلْ تُحِبُّ السَّفَرَ؟ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| கேட்டேன் (சென்றகால வினைச்சொல்) | سَمِعْتُ | பயணம் செய்தான் (கடந்தகால வினைச்சொல்) | رَكِبَ |
| உபதேசம் (பெயர்ச் சொல்) | اَلنَّصِيحَةُ | இப்றாஹீம் (பெயர்ச் சொல்) | إِبْرَاهِيمُ |
| பரவுகிறது/பரவும் (நிகழ்கால/வருங்கால வினைச்சொல்) | يَسْطَعُ | குதிரை (பெயர்ச் சொல்) | اَلْحِصَانُ |
| ஒளி (பெயர்ச் சொல்) | اَلنُّورُ | விளையாடுகிறான்/ விளையாடுவான் (நிகழ்கால/வருங்கால வினைச்சொல்) | يُدَاعِبُ |

| | | | |
|---|---|---|---|
| இல் (இடைச் சொல்) | فِي | இஸ்மாயீல் (பெயர்ச் சொல்) | إِسْمَاعِيلُ |
| அறை (பெயர்ச் சொல்) | اَلْحُجْرَةُ | பூனை (பெயர்ச் சொல்) | اَلْقِطُّ |
| செல்கிறது/செல்லும் (நிகழ்கால/வருங்கால வினைச்சொல்) | تَجْرِي | அறுவடை செய்கிறார்/ அறுவடை செய்வார் (நிகழ்கால/வருங்கால வினைச்சொல்) | يَحْصُدُ |
| கப்பல் (பெயர்ச் சொல்) | اَلسَّفِينَةُ | விவசாயி (பெயர்ச் சொல்) | اَلْفَلاَّحُ |
| மீது (இடைச் சொல்) | عَلَى | கோதுமை (பெயர்ச் சொல்) | اَلْقَمْحُ |
| தண்ணீர் (பெயர்ச் சொல்) | اَلْمَاءُ | சாப்பிடுகிறது/ சாப்பிடும் (நிகழ்கால/ வருங்கால வினைச்சொல்) | تَأْكُلُ |
| ? (கேள்விக்காக பயன்படுத்தப் படும் இடைச்சொல்) | هَلْ | ஆடு (பெயர்ச் சொல்) | اَلشَّاةُ |
| நீ விரும்புகிறாய்/நீ விரும்புவாய் (நிகழ்கால/ வருங்கால வினைச்சொல்) | تُحِبُّ | அவரை (பெயர்ச் சொல்) | فُوْلٌ |
| பயணம் (பெயர்ச் சொல்) | اَلسَّفَرُ | இன்னும் (இடைச் சொல்) | وَ |
| | | வாற்கோதுமை (பெயர்ச் சொல்) | شَعِيْرٌ |

**விளக்கம்:**

மேலுள்ள உதாரணங்களில் வந்துள்ள பெயர்ச்சொல், சென்றகால வினைச் சொல், நிகழ்கால அல்லது வருங்கால வினைச் சொல் மற்றும் இடைச்சொல் இவைகளுக்குத்தான் கலிமா என்று சொல்லப்படும்.

-------------------------

# اَلْفِعْلُ الْمَاضِي

## சென்றகால வினைச்சொல்

**اَلْقَاعِدَةُ:**

اَلْفِعْلُ الْمَاضِي هُوَ كُلُّ فِعْلٍ يَدُلُّ عَلَى حُصُوْلِ عَمَلٍ فِي الزَّمَنِ الْمَاضِي.

**சட்டம்:**

சென்ற காலத்தில் நடந்த ஒரு செயலைக் குறிக்கும் வினைச் சொல்லுக்கு اَلْفِعْلُ الْمَاضِي என்று சொல்லப்படும்.

**உதாரணங்கள்** **الأمثلة :**

| | |
|---|---|
| 1. நாய் ஓடியது | ١- جَرَى الْكَلْبُ |
| 2. ஆண் நின்றான் | ٢- وَقَفَ الرَّجُلُ |
| 3. புத்தகம் வீணானது | ٣- ضَاعَ الْكِتَابُ |
| 4. மணி அடித்தது | ٤- دَقَّتِ السَّاعَةُ |
| 5. சிறுமி வந்தாள் | ٥- جَاءَتِ الْبِنْتُ |
| 6. கோழி முட்டையிட்டது | ٦- بَاضَتِ الدَّجَاجَةُ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| அடித்தது | دَقَّتْ | ஓடியது | جَرَى |
| மணி | اَلسَّاعَةُ | நாய் | اَلْكَلْبُ |
| வந்தாள் | جَاءَتْ | நின்றான் | وَقَفَ |
| சிறுமி | اَلْبِنْتُ | ஆண் | اَلرَّجُلُ |

| | | | |
|---|---|---|---|
| முட்டையிட்டது | بَاضَتْ | வீணானது | ضَاعَ |
| கோழி | اَلدَّجَاجَةُ | புத்தகம் | اَلْكِتَابُ |

**விளக்கம்:**

மேலுள்ள உதாரணங்களில் உள்ள

جَرَى, وَقَفَ, ضَاعَ, دَقَّتْ, جَاءَتْ, بَاضَتْ

இவற்றினுடைய அர்த்தங்கள் ஒரு செயல் சென்ற காலத்தில் நடந்ததை குறிக்கிறன. இதைத்தான் اَلْفِعْلُ الْمَاضِي என்று சொல்கிறோம்.

-------------------------

# اَلْفِعْلُ الْمُضَارِعُ

# நிகழ்கால அல்லது வருங்கால வினைச்சொல்

**اَلْقَاعِدَةُ:**

اَلْفِعَلُ الْمُضَارِعُ هُوَ كُلُّ فِعْلٍ يَدُلُّ عَلَى حُصُوْلِ عَمَلٍ فِي الزَّمَنِ الْحَاضِرِ أَو الْمُسْتَقْبَلِ وَلَا بُدَّ أَنْ يَّكُوْنَ مَبْدُوْءًا بِحَرْفٍ مِنْ أَحْرُفِ الْمُضَارَعَةِ وَهِيَ اَلْهَمْزَةُ وَالنُّوْنُ وَالْيَاءُ وَالتَّاءُ.

**சட்டம்:**

நிகழ்காலத்தில் நடைபெறக்கூடிய அல்லது வருங்காலத்தில் நடைபெறும் ஒரு நிகழ்வைக் குறிக்கும் எல்லா வினைச் சொல்லுக்கும் اَلْفِعْلُ الْمُضَارِعُ என்று சொல்லப்படும்.

அந்த வினைச்சொல்லின் ஆரம்பத்தில் பின்வரும் நான்கு எழுத்துக்களில் ஏதாவது ஒன்று வரும். அந்நான்கு எழுத்துக்களையும் مُضَارَعَةٌ உடைய எழுத்துக்கள் என்று சொல்லப்படும்.

அவை : ت, ي, ن, ا

**உதாரணங்கள்** **الأمثلة :**

| | |
|---|---|
| 1. நான் எனது இரு கைகளையும் கழுவுகிறேன்/கழுவுவேன் | ١– أَغْسِلُ يَدَيَّ |
| 2. நான் எனது ஆடைகளை அணிகிறேன்/ அணிவேன். | ٢– أَلْبَسُ ثِيَابِي |
| 3. நாங்கள் பந்தைக் கொண்டு விளையாடுகிறோம்/ விளையாடுவோம். | ٣– نَلعَبُ بِالْكُرَةِ |
| 4. நாங்கள் வயல்வெளிகளில் நடக்கிறோம்/ நடப்போம் | ٤– نَمْشِي فِي الْحُقُوْلِ |

| | |
|---|---|
| 5. நாய் குரைக்கிறது/குரைக்கும் | ٥- يَنْبَحُ الْكَلْبُ |
| 6. வாயிற்காப்பாளன் விழிப்போடு இருக்கிறான்/இருப்பான் | ٦- يَنْتَبِهُ الْحَارِسُ |
| 7. சிறுமி சாப்பிடுகிறாள்/சாப்பிடுவாள் | ٧- تَأْكُلُ الْبِنْتُ |
| 8. ரோஜாப் பூ வாடுகிறது/வாடும் | ٨- تَذْبُلُ الْوَرْدَةُ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| வயல்வெளிகள் | اَلْحُقُوْلُ | நான் கழுவுகிறேன்/ கழுவுவேன் | أَغْسِلُ |
| குரைக்கிறது/குரைக்கும் | يَنْبَحُ | எனது இரு கைகள் | يَدَايَ |
| நாய் | اَلْكَلْبُ | நான் அணிகிறேன்/ அணிவேன். | أَلْبَسُ |
| விழிப்போடு இருக்கிறான்/இருப்பான் | يَنْتَبِهُ | எனது ஆடைகள் | ثِيَابِي |
| வாயிற்காப்பாளன் | اَلْحَارِسُ | நாங்கள் விளையாடுகிறோம்/ விளையாடுவோம். | نَلْعَبُ |
| சாப்பிடுகிறாள்/ சாப்பிடுவாள் | تَأْكُلُ | கொண்டு | بِ |
| சிறுமி | اَلْبِنْتُ | பந்து | اَلْكُرَةُ |
| வாடுகிறது/வாடும் | تَذْبُلُ | நாங்கள் நடக்கிறோம்/ நடப்போம் | نَمْشِي |
| ரோஜாப் பூ | اَلْوَرْدَةُ | இல் | فِي |

**விளக்கம் :**

மேலுள்ள உதாரணங்களில் உள்ள

أَلْبَسُ, أَغْسِلُ என்ற வினைச் சொற்களின் ஆரம்பத்தில் أَ வந்துள்ளதைக் காணலாம்.

نَمْشِي, نَلْعَبُ என்ற வினைச் சொற்களின் ஆரம்பத்தில் ن வந்துள்ளதைக் காணலாம்.

يَنْتَبِهُ, يَنْبَحُ என்ற வினைச் சொற்களின் ஆரம்பத்தில் ي வந்துள்ளதைக் காணலாம்.

تَذْبُلُ, تَأْكُلُ என்ற வினைச் சொற்களின் ஆரம்பத்தில் ت வந்துள்ளதைக் காணலாம்.

மேலும் இந்த வினைச்சொற்கள் அனைத்தும் நிகழ்கால மற்றும் வருங்கால அர்த்தத்தில் வந்துள்ளன.

**குறிப்பு:**

நான் கழுவுகிறேன் அல்லது கழுவுவேன், நான் அணிகிறேன் அல்லது அணிவேன் என்று நான் என்று ஆரம்பிக்கும் வினைச்சொல்லின் ஆரம்பத்தில் أ வரும். உ.ம். أَلْبَسُ, أَغْسِلُ

இதுபோன்று நாங்கள் என்று ஆரம்பிக்கும் வினைச்சொல்லின் ஆரம்பத்தில் ن வரும். உ.ம். نَمْشِي, نَلْعَبُ

இது போன்று அது/அவன் (ஆண்பால்) என்று ஆரம்பிக்கும் வினைச் சொல்லின் ஆரம்பத்தில் ي வரும். உ.ம். يَنْتَبِهُ, يَنْبَحُ

அவள்/அது (பெண்பால்) என்று ஆரம்பிக்கும் வினைச்சொல்லின் ஆரம்பத்திலும் நீ, நீங்கள் என ஆரம்பிக்கும் வினைச்சொல்லின் ஆரம்பத்திலும் ت வரும்.

உ.ம். تَذْبُلُ, تَأْكُلُ

------------------------

# فِعْلُ الْأَمْرِ

## கட்டளை வினைச் சொல்

**اَلْقَاعِدَةُ :**

فِعْلُ الْأَمْرِ هُوَ كُلُّ فِعْلٍ يُطْلَبُ بِهِ حُصُوْلُ شَيْءٍ فِي الزَّمَنِ الْمُسْتَقْبَلِ.

**சட்டம்:**

வருங்காலத்தில் ஒரு செயல் நிகழ வேண்டும் என அறிவிக்கின்ற ஒவ்வொரு வினைச்சொல்லும் ஏவல் வினையாகும்.

**உதாரணங்கள்** **الأمثلة :**

| | |
|---|---|
| 1. பந்தைக் கொண்டு விளையாடு | ١- اِلْعَبْ بِالْكُرَةِ |
| 2. உனது பூனைக்கு உணவு கொடு | ٢- أَطْعِمْ قِطَّكَ |
| 3. உனது ஆடைகளைச் சுத்தம் செய் | ٣- نَظِّفْ ثِيَابَكَ |
| 4. சீக்கிரமாகத் தூங்கு | ٤- نَمْ مُبَكِّرًا |
| 5. மெதுவாகச் செல் | ٥- تَمَهَّلْ فِي السَّيْرِ |
| 6. உணவை நன்றாக மெல் | ٦- أَجِدْ مَضْغَ الطَّعَامِ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| சீக்கிரமாக | مُبَكِّرًا | விளையாடு | اِلْعَبْ |
| மெதுவாக செயல்படு | تَمَهَّلْ | கொண்டு | بِ |
| இல் | فِي | பந்து | اَلْكُرَةُ |
| செல்லுதல் | سَيْرٌ | உணவு கொடு | أَطْعِمْ |

| | | | |
|---|---|---|---|
| நன்றாகச் செய் | أَجِدْ | உனது பூனை | قِطُّكَ |
| மெல்லுதல் | مَضْغٌ | சுத்தம் செய் | نَظِّفْ |
| உணவு | طَعَامٌ | உனது ஆடைகள் | ثِيَابُكَ |
| | | தூங்கு | نَمْ |

**விளக்கம்:**

மேற்கூறிய உதாரணங்களில் வரக்கூடிய

**اِلْعَبْ، أَطْعِمْ ، نَظِّفْ ، نَمْ ، تَمَهَّلْ ، أَجِدْ**

இவை அனைத்தும் வருங்காலத்தில் ஒரு செயல் நிகழ்வதை அறிவிக்கும் ஏவல் வினையாகவே வந்துள்ளன.

உ.ம்.

**اِلْعَبْ** விளையாடு **أَطْعِمْ** உணவு கொடு என்பதைப் போல.

-------------------------

# اَلْفَاعِلُ

## ஒரு செயலைச் செய்பவன்

اَلْقَاعِدَةُ :

اَلْفَاعِلُ: اِسْمٌ مَرْفُوْعٌ تَقَدَّمَهُ فِعْلٌ، وَدَلَّ عَلَى الَّذِي فَعَلَ الْفِعْلَ.

**சட்டம்:**

اَلْفَاعِلُ என்பது ஒரு பெயர்ச் சொல்லாகும். இதன் கடைசி எழுத்தில் رَفْعٌ உடைய அடையாளமாக ـُ / ـٌ வரும்.

இந்த பெயர்ச்சொல்லுக்கு முன்னால் ஒரு வினைச்சொல் வரும்.

فَاعِلٌ என்பது ஒரு செயலை செய்தவனைக் குறிக்கும்.

**உதாரணங்கள்** الأمثلة :

| | |
|---|---|
| 1. சிட்டுக் குருவி பறந்தது. | ١– طَارَ الْعُصْفُوْرُ |
| 2. குதிரை ஓடியது | ٢– جَرَى الْحِصَانُ |
| 3. சிறுவன் விளையாடினான் | ٣– لَعِبَ الْوَلَدُ |
| 4. மீன் நீந்துகிறது | ٤– يَعُوْمُ السَّمَكُ |
| 5. கொசு கடிக்கிறது | ٥– يَلْسَعُ الْبَعُوْضُ |
| 6. சிறுமி சாப்பிடுகிறாள். | ٦– تَأْكُلُ الْبِنْتُ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| நீந்துகிறது | يَعُوْمُ | பறந்தது | طَارَ |

| | | | |
|---|---|---|---|
| மீன் | سَمَكٌ | சிட்டுக்குருவி | عُصْفُوْرٌ |
| கடிக்கிறது | يَلْسَعُ | ஓடியது | جَرَى |
| கொசு | بَعُوْضٌ | குதிரை | حِصَانٌ |
| சாப்பிடுகிறாள் | تَأْكُلُ | விளையாடினான் | لَعِبَ |
| சிறுமி | بِنْتٌ | சிறுவன் | وَلَدٌ |

**விளக்கம்:**

மேற்கூறப்பட்ட உதாரணங்களில்

عُصْفُوْرٌ، حِصَانٌ، وَلَدٌ، سَمَكٌ، بَعُوْضٌ، بِنْتٌ

இவையெல்லாம் فَاعِلٌ லாக வந்துள்ளன. அதாவது ஒரு செயலை செய்வதாக வந்துள்ளன. மேலும் இவற்றின் கடைசி எழுத்தில் رَفْعٌ உடைய அடையாளமாக ضَمَّةٌ (ـُـ) வந்துள்ளது.

மேலும் உதாரணங்களில் கூறப்பட்ட فَاعِلٌ களுக்கு முன்பாக வினைச் சொற்கள் வந்துள்ளதை கவனிக்கவும்.

فَاعِلٌ உயர்திணையாகவும் அஃறிணையாகவும் வரலாம்.

உயர்திணை : மனிதனைக் குறிக்கும்.
அஃறிணை : மனிதன் அல்லாதவைகளைக் குறிக்கும்.

-------------------------

# اَلْمَفْعُوْلُ بِهِ

## செயப்படு பொருள்

اَلْقَاعِدَةُ :

اَلْمَفْعُوْلُ بِهِ اِسْمٌ مَنْصُوْبٌ وَقَعَ عَلَيْهِ فِعْلُ الْفَاعِلِ.

**சட்டம்:**

اَلْمَفْعُوْلُ بِهِ என்பது ஒரு பெயர்ச் சொல்லாகும். இதன் கடைசி எழுத்தில் نَصْبٌ உடைய அடையாளமாக فَتَحَةٌ (ـَ/ـً) வரும். ஒருவரின் செயல் இதன் மீது நிகழ்ந்திருக்கும்.

**உதாரணங்கள்** الأمثلة :

| | |
|---|---|
| 1. மாணவன் கயிற்றைக் கட்டினான் | ١– شَدَّ التِّلْمِيْذُ الْحَبْلَ |
| 2. சிறுமி ஆடையை மடித்தாள் | ٢– طَوَتِ الْبِنْتُ الثَّوْبَ |
| 3. ஓநாய் செம்மறி ஆட்டுக்குட்டியை சாப்பிட்டது | ٣– أَكَلَ الذِّئْبُ الْخَرُوْفَ |
| 4. (போட்டியில்) முந்தியவன் பரிசு பெறுகிறான். | ٤– يَرْبَحُ السَّابِقُ جَائِزَةً |
| 5. குள்ளநரி கோழியை வேட்டையாடுகிறது. | ٥– يَصِيْدُ الثَّعْلَبُ دَجَاجَةً |
| 6. கறிக்கடைக்காரர் இறைச்சியை விற்பனை செய்கிறார். | ٦– يَبِيْعُ الْقَصَّابُ اللَّحْمَ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| (இலாபமாக) பெறுகிறான் | يَرْبَحُ | கட்டினான் | شَدَّ |
| முந்தி வந்தவன் | سَابِقٌ | மாணவன் | تِلْمِيْذٌ |

| | | | |
|---|---|---|---|
| பரிசு | جَائِزَةٌ | கயிறு | حَبْلٌ |
| வேட்டையாடுகிறது | يَصِيْدُ | மடித்தாள் | طَوَتْ |
| குள்ளநரி | ثَعْلَبٌ | சிறுமி | بِنْتٌ |
| கோழி | دَجَاجَةٌ | ஆடை | ثَوْبٌ |
| விற்பனை செய்கிறான் | يَبِيْعُ | சாப்பிட்டது | أَكَلَ |
| கறிக்கடைக்காரர் | قَصَّابٌ | ஓநாய் | ذِئْبٌ |
| இறைச்சி | لَحْمٌ | செம்மறி ஆட்டுக்குட்டி | خَرُوْفٌ |

**விளக்கம்:**

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் வரக்கூடிய

حَبْلٌ ثَوْبٌ خَرُوْفٌ جَائِزَةٌ دَجَاجَةٌ لَحْمٌ

இவை مَفْعُوْلٌ بِهِ களாக வந்துள்ளன. இவற்றின் மீது இவற்றுக்கு முந்தியுள்ள فَاعِلٌ உடைய செயல் நிகழ்ந்துள்ளது. மேலும் இவற்றின் கடைசி எழுத்தில் نَصْبٌ உடைய அடையாளமாக فَتَحَةٌ (ـًـ/ـَـ) வந்துள்ளது.

مَفْعُوْلٌ بِهِ உயர்திணையாகவும் அஃறிணையாகவும் வரலாம்.

-------------------------

# اَلْمُوَازَنَةُ بَيْنَ الْفَاعِلِ وَالْمَفْعُوْلِ بِهِ

## فَاعِلٌ மற்றும் مَفْعُوْلٌ بِهِ விற்கும் இடையிலுள்ள ஒப்பீடு!

اَلْقَوَاعِدُ:

كُلُّ فَاعِلٍ وَكُلُّ مَفْعُولٍ به اِسْمٌ.

اَلْفَاعِلُ هُوَ الَّذِي صَدَرَ عَنْهُ الْفِعْلُ.

اَلْمفْعُولُ بِهِ هُوَ الَّذِي وَقَعَ عَلَيْهِ الْفِعْلُ.

اَلْفَاعِلُ آخِرُهُ مَرْفُوْعٌ.

اَلْمَفْعُوْلُ بِهِ آخِرُهُ مَنْصُوبٌ.

**சட்டங்கள்:**

فَاعِلٌ மற்றும் مَفْعُوْلٌ بِهِ இவ்விரண்டும் பெயர்ச் சொற்களாகும்.

ஒரு செயலை செய்பவனுக்கு فَاعِلٌ என்று சொல்லப்படும்.

ஒரு செயல் எவன் மீது நிகழ்ந்துள்ளதோ அவனுக்கு مَفْعُوْلٌ بِهِ என்று சொல்லப்படும்.

فَاعِلٌ உடைய கடைசி எழுத்தில் رَفْعٌ வரும்.

مَفْعُوْلٌ بِهِ உடைய கடைசி எழுத்தில் نَصْبٌ வரும்.

رَفْعٌ உடைய அடையாளமாக ـُ / ـٌ வரும்

نَصْبٌ உடைய அடையாளமாக ـَ / ـً வரும்

**உதாரணங்கள்** الأمثلة :

| | |
|---|---|
| 1. குதிரை வண்டியை இழுக்கிறது | ١– يَجُرُّ الْحِصَانُ الْعَجَلَةَ |
| 2. சிறுவன் பூவைப் பறித்தான் | ٢– قَطَفَ الْغُلَامُ الزَّهْرَةَ |
| 3. பாத்திமா வெள்ளாட்டுக் குட்டியைக் கட்டினாள் | ٣– رَبَطَتْ فَاطِمَةُ الْجَدْيَ |

| | |
|---|---|
| 4. விவசாயி விளை நிலத்திற்கு நீர் பாய்ச்சுகிறார். | ٤- يَسْقِي الْفلاَّحُ الزَّرْعَ |
| 5. விளையாடுபவன் பந்தை போட்டான். | ٥- قَذَفَ اللاَّعِبُ الْكُرَةَ |
| 6. போலீஸ் திருடனை சிறையில் அடைத்தார். | ٦- حَبَسَ الشُّرْطِيُّ اللِّصَّ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| நீர் பாய்ச்சுகிறார். | يَسْقِي | இழுக்கிறது | يَجُرُّ |
| விவசாயி | اَلْفَلاَّحُ | குதிரை | حِصَانٌ |
| விளைநிலம், விதை, செடி | اَلزَّرْعُ | வண்டி | عَجَلَةٌ |
| போட்டான் | قَذَفَ | பறித்தான் | قَطَفَ |
| விளையாடுபவன் | اَللاَّعِبُ | சிறுவன் | غُلَامٌ |
| பந்து | اَلْكُرَةُ | பூ | زَهْرَةٌ |
| சிறையில் அடைத்தார் | حَبَسَ | கட்டினாள் | رَبَطَتْ |
| போலீஸ் | اَلشُّرْطِيُّ | ஃபாத்திமா | فَاطِمَةُ |
| திருடன் | اَللِّصُّ | வெள்ளாட்டுக் குட்டி | اَلْجَدْيُ |

**விளக்கம்:**

மேற்கூறப்பட்ட உதாரணங்களில்

اَلْحِصَانُ، اَلْغُلامُ، فَاطِمَةُ، اَلْفَلاَّحُ، اَللاَّعِبُ، اَلشُّرْطِيُّ

இவையெல்லாம் فَاعِلٌ லாக (ஒரு செயலை செய்யக்கூடியதாக) வருகிறது.

மேற்கூறப்பட்ட உதாரணங்களில்

اَلْعَجَلَةُ، اَلزَّهْرَةُ، اَلْجَدْيُ، اَلزَّرْعُ، اَلْكُرَةُ، اَللِّصُّ

இவையெல்லாம் مَفْعُوْلٌ بِهِ யாக (فَاعِلٌ ன் செயல் இதன் மீது நிகழ்ந்துள்ளதாக) வந்துள்ளது.

-------------------------

# اَلْمُبْتَدَأُ وَالْخَبَرُ
## எழுவாய் பயனிலை

اَلْقَوَاعِدُ:

اَلْمُبْتَدَأُ اِسْمٌ مَرْفُوْعٌ فِى أَوَّلِ الْجُمْلَةِ.

اَلْخَبَرُ اِسْمٌ مَرْفُوْعٌ يُكَوِّنُ مَعَ الْمُبْتَدَإِ جُمْلَةً مُفِيْدَةً

**சட்டங்கள்:**

مُبْتَدَأٌ என்பது ஒரு பெயர்ச் சொல்லாகும். இது வாக்கியத்தின் ஆரம்பத்தில் வரும். இதற்கு رَفْعٌ வரும்.

خَبَرٌ என்பதும் கடைசி எழுத்தில் رَفْعٌ உள்ள ஒரு பெயர்ச் சொல்லாகும்.

مُبْتَدَأٌ உடன் خَبَرٌ வரும்பொழுது ஒரு வாக்கியம் முழுமையாக அமையும்.

**உதாரணங்கள்** **الأمثلة :**

| | |
|---|---|
| 1. ஆப்பிள் இனிப்பாக உள்ளது | ١– اَلتُّفَّاحَةُ حُلْوَةٌ |
| 2. புகைப்படம் அழகாக உள்ளது | ٢– اَلصُّوْرَةُ جَمِيْلَةٌ |
| 3. ஓடுவது (உடலுக்கு) பயன்தரும் | ٣– اَلْجَرْيُ مُفِيْدٌ |
| 4. இரயில் விரைவாக செல்லக்கூடியது | ٤– اَلْقِطَارُ سَرِيْعٌ |
| 5. தூய்மையாக இருப்பது கடமையாகும் | ٥– اَلنَّظَافَةُ وَاجِبَةٌ |
| 6. பூமி உருளையானது | ٦– اَلْأَرْضُ مُسْتَدِيْرَةٌ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| இரயில் | اَلْقِطَارُ | ஆப்பிள் | اَلتُّفَّاحَةُ |
| வேகமாக செல்லக்கூடியது | سَرِيْعٌ | இனிப்பானது | حُلْوَةٌ |

| | | | |
|---|---|---|---|
| சுத்தம் | اَلنَّظَافَةُ | புகைப்படம் | اَلصُّوْرَةُ |
| கடமை | وَاجِبَةٌ | அழகானது | جَمِيْلَةٌ |
| பூமி | اَلْأَرْضُ | ஓடுவது | اَلْجَرْيُ |
| உருளையானது | مُسْتَدِيْـرَةٌ | பயன்தரக்கூடியது | مُفِيْدٌ |

**விளக்கம்:**

மேற்கூறப்பட்ட உதாரணங்களில்

اَلتُّـفَّاحَةُ، اَلصُّوْرَةُ، اَلْجَرْيُ، اَلْقِطَارُ، اَلنَّظَافَةُ، اَلْأَرْضُ

இவையெல்லாம் வாக்கியத்தின் ஆரம்பத்தில் வந்துள்ளது. இவற்றுக்கு مُبْتَدَأٌ என்று சொல்லப்படும். இவற்றின் கடைசி எழுத்தில் رَفْعٌ உடைய அடையாளமாக ضَمَّةٌ (ـُ) வந்துள்ளது.

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் வந்துள்ள

حُلْوَةٌ، جَمِيْلَةٌ، مُفِيْدٌ، سَرِيْعٌ، وَاجِبَةٌ، مُسْتَدِيْـرَةٌ

இவையெல்லாம் வாக்கியத்தின் கடைசியில் வந்துள்ள خَبَرٌ (பயனிலை)களாகும். இதன் கடைசி எழுத்தில் رَفْعٌ உடைய அடையாளமாக ضَمَّةٌ (ـٌ) வந்துள்ளது.

இந்த خَبَرٌ வந்ததால்தான் வாக்கியம் முழுமை பெற்றுள்ளது.

-------------------------

# اَلْجُمْلَةُ الْفِعْلِيَّةُ

## வினைச்சொல் வாக்கியம்

**اَلْقَاعِدَةُ:**

**كُلُّ جُمْلَةٍ تَتَرَكَّبُ مِنْ فِعْلٍ وَفَاعِلٍ تُسَمَّى جُمْلَةً فِعْلِيَّةً.**

**சட்டம்:**

ஒரு வாக்கியத்தில் فِعْلٌ (வினைச்சொல்)லும் فَاعِلٌ லும் (ஒரு செயலை செய்பவன்) வந்தால் அதற்கு اَلْجُمْلَةُ الْفِعْلِيَّةُ (வினைச்சொல் வாக்கியம்) என்று சொல்லப்படும்.

**உதாரணங்கள்** **الأمثلة :**

| | |
|---|---|
| 1. மின்னல் மின்னியது | ١- لَمَعَ الْبَرْقُ |
| 2. ஓநாய் ஊளையிட்டது | ٢- عَوَى الذِّئْبُ |
| 3. பனி விழுகிறது | ٣- يَسْقُطُ الثَّلْجُ |
| 4. குளிர் கடுமையாகிறது | ٤- يَشْتَدُّ الْبَرْدُ |
| 5. (நீ) ரோஜா பூவை பறி | ٥- اِقْطِفْ اَلْوَرْدَةَ |
| 6. (நீ) புத்தகத்தை எடு | ٦- خُذْ اَلْكِتَابَ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| கடுமையாகிறது | يَشْتَدُّ | மின்னியது | لَمَعَ |
| குளிர் | بَرْدٌ | மின்னல் | بَرْقٌ |
| பறி | اِقْطِفْ | ஊளையிட்டது | عَوَى |
| ரோஜா பூ | وَرْدَةٌ | ஓநாய் | ذِئْبٌ |

| | | | |
|---|---|---|---|
| எடு | خُذْ | விழுகிறது | يَسْقُطُ |
| புத்தகம் | كِتَابٌ | பனி | ثَلْجٌ |

**விளக்கம்:**

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் வந்துள்ள

**لَمَعَ عَوَى يَسْقُطُ يَشْتَدُّ اِقْطِفْ خُذْ**

இவை **فِعْلٌ** எனும் வினைச் சொற்களாகும்.

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் வந்துள்ள

**بَرْقٌ ذِئْبٌ ثَلْجٌ بَرْدٌ وَرْدَةٌ كِتَابٌ**

இவை **فَاعِلٌ** களாகும்.

எனவே மேற்கூறப்பட்ட வாக்கியங்களை **اَلْجُمْلَةُ الْفِعْلِيَّةُ** (வினைச் சொல் வாக்கியம்) என்று சொல்கின்றோம்.

**فَاعِلٌ** உயர்திணையாகவும் அஃறினையாகவும் வரலாம்.

-------------------------

# اَلْجُمْلَةُ الْاِسْمِيَّةُ

## பெயர்ச்சொல் வாக்கியம்

اَلْقَاعِدَةُ:

كُلُّ جُمْلَةٍ تَتَرَكَّبُ مِنْ مُبْتَدَإٍ وَخَبَرٍ تُسَمَّى جُمْلَةً اِسْمِيَّةً.

**சட்டம்:**

ஒரு வாக்கியத்தில் مُبْتَدَأٌ (எழுவாயும்) خَبَرٌ (பயனிலையும்) சேர்ந்து வந்தால் அதற்கு اَلْجُمْلَةُ الْاِسْمِيَّةُ (பெயர்ச்சொல் வாக்கியம்) என்று சொல்லப்படும்.

**உதாரணங்கள்** الأمثلة :

| | |
|---|---|
| 1. வீடு விசாலமாக உள்ளது | ١- اَلدَّارُ وَاسِعَةٌ |
| 2. தட்பவெட்ப நிலை நடுநிலையாக உள்ளது | ٢- اَلْجَوُّ مُعْتَدِلٌ |
| 3. புழுதி பறக்கிறது | ٣- اَلْغُبَارُ ثَائِرٌ |
| 4. தெரு கூட்ட நெரிசலாக உள்ளது | ٤- اَلشَّارِعُ مُزْدَحِمٌ |
| 5. பாதை குறுகலாக உள்ளது | ٥- اَلطَّرِيْقُ ضَيِّقَةٌ |
| 6. எலி மறைந்துள்ளது | ٦- اَلْفَأْرَةُ مُخْتَبِئَةٌ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| தெரு | شَارِعٌ | வீடு | دَارٌ |
| கூட்ட நெரிசலானது | مُزْدَحِمٌ | விசாலமானது | وَاسِعَةٌ |
| பாதை | طَرِيْقٌ | தட்பவெட்ப நிலை | جَوٌّ |
| குறுகலானது | ضَيِّقَةٌ | நடுநிலையானது | مُعْتَدِلٌ |

| | | | |
|---|---|---|---|
| எலி | فَأْرَةٌ | புழுதி | غُبَارٌ |
| மறைந்துள்ளது | مُخْتَبِأَةٌ | பறக்கக் கூடியது | ثَائِرٌ |

**விளக்கம்:**

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் வந்துள்ள

**اَلدَّارُ اَلْجَوُ اَلْغُبَارُ اَلشَّارِعُ اَلطَّرِيْقُ اَلْفَأْرَةُ**

இவையெல்லாம் ஒரு வாக்கியத்தின் ஆரம்பத்தில் வந்துள்ள **مُبْتَدَأٌ** (எழுவாய்) ஆகும். மேலும் இவையெல்லாம் பெயர்ச் சொற்களாகும்.

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் வரக்கூடிய

**وَاسِعَةٌ مُعْتَدِلٌ ثَائِرٌ مُزْدَحِمٌ ضَيِّقَةٌ مُخْتَبِأَةٌ**

இவையெல்லாம் வாக்கியத்தின் கடைசியில் வந்துள்ள **خَبَرٌ** (பயனிலை) ஆகும். மேலும் இவையெல்லாம் பெயர்ச் சொற்களாகும். இதற்கு **رَفْعٌ** வந்துள்ளது.

எனவே, மேற்கூறப்பட்ட வாக்கியங்களை **اَلْجُمْلَةُ الْاِسْمِيَّةُ** (பெயர்ச் சொல் வாக்கியம்) என கூறுகிறோம்.

-------------------------

# نَصْبُ الْفِعْلِ الْمُضَارِعِ

## நிகழ்கால, வருங்கால வினைச் சொல்லுக்கு نَصْبٌ உடைய அடையாளமாக فَتْحَةٌ (ـَ) வருதல்!

**اَلْقَاعِدَةُ:**

**يُنْصَبُ الْفِعْلُ الْمُضَارِعُ مَتَى سَبَقَهُ أَحَدُ النَّوَاصِبِ الْأَرْبَعَةِ، وَهِيَ: أَنْ، لَنْ، إِذَنْ، كَيْ.**

**சட்டம்:**

நிகழ்கால, வருங்கால வினைச் சொல்லுக்கு முன்பாக பின்வரும் நான்கு இடைச் சொற்களில் ஏதாவது ஒன்று வந்தால் அப்போது வினைச்சொல்லின் கடைசி எழுத்தில் نَصْبٌ வரும்.

அந்த நான்கு இடைச் சொற்கள்

| | |
|---|---|
| இது நிகழ்கால, வருங்கால வினைச்சொல்லுக்கு முன்னால் வரும்பொழுது வினைச் சொல்லின் மூலப்பொருளை (مَصْدَرٌ ரை) அர்த்தமாக தரும். | أَنْ |
| அறவே இல்லை | لَنْ |
| அதற்(காக) | كَيْ |
| அந்நேரம் | إِذَنْ |

**உதாரணங்கள்** **الأمثلة :**

| | |
|---|---|
| 1. நான் நன்றாக நீந்தவேண்டுமென்று விரும்புகின்றேன்/விரும்புவேன் | ١- أُرِيْدُ أَنْ أُحْسِنَ السِّبَاحَةَ. |
| 2. தட்பவெட்பநிலை நடுநிலையாக ஆகும் என்று நம்புகின்றேன்/நம்புவேன் | ٢- أَرْجُوْ أَنْ يَعْتَدِلَ الْجَوُّ. |
| 3. நீ எம்மைச் சந்திப்பது எனக்கு சந்தோஷம் அளிக்கிறது/அளிக்கும் | ٣- يَسُرُّنِيْ أَنْ تَزُوْرَنَا. |

| | |
|---|---|
| 4. நான் நிச்சயமாக பொய் சொல்லமாட்டேன் | ٤- لَنْ أَكْذِبَ. |
| 5. சோம்பேறி நிச்சயமாக வெற்றிபெற மாட்டான் | ٥- لَنْ يَفُوْزَ الْكَسْلَانُ. |
| 6. நான் நிச்சயமாக பூனையை அடிக்க மாட்டேன் | ٦- لَنْ أَضْرِبَ الْقِطَّ. |
| 7. (நீ எங்களிடம் வந்தால்) அந்நேரம் நீ எங்களிடம் தங்குவாய் | ٧- إِذَنْ تُقِيْمَ عِنْدَنَا |
| 8. (நீ நேர்மையானவனாக இருந்தால்) அந்நேரம் உனது வியாபாரம் இலாபம் அடையும் | ٨- إِذَنْ تَـرْبَحَ تِجَارَتُكَ |
| 9. (ஜன்னல்களை நீ அடைத்தால்) அந்நேரம் காற்று மாசுபடும் | ٩- إِذَنْ يَفْسُدَ الْـهَوَاءُ |
| 10. கல்வி கற்பதற்காக நான் வந்தேன் | ١٠- جِئْتُ كَيْ أَتَعَلَّمَ. |
| 11. சுற்றிப் பார்ப்பதற்காக நான் வெளியில் சென்றேன் | ١١- خَرَجْتُ كَيْ أَتَـنَـزَّهَ. |
| 12. நாட்டிற்கு சேவை செய்வதற்காக நான் கல்வி கற்கிறேன். | ١٢- أَتَعَلَّمُ كَيْ أَخْدُمَ الْوَطَنَ. |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| அந்நேரம் நீ தங்குவாய் | إِذَنْ تُقِيْمَ | நான் விரும்புகிறேன்/ விரும்புவேன் | أُرِيْدُ |
| எம்மிடம் | عِنْدَنَا | நான் நன்றாக செய்வது | أَنْ أُحْسِنَ |
| அந்நேரம் இலாபமடையும் | إِذَنْ تَـرْبَحَ | நீச்சல் | سِبَاحَةٌ |
| உனது வியாபாரம் | تِجَارَتُكَ | நான் நம்புகின்றேன்/ நம்புவேன் | أَرْجُوْ |
| அந்நேரம் மாசடையும் | إِذَنْ يَفْسُدَ | நடுநிலையாக இருப்பது | أَنْ يَعْتَدِلَ |

| | | | |
|---|---|---|---|
| காற்று | هَوَاءٌ | தட்பவெட்ப நிலை | جَوٌّ |
| நான் வந்தேன் | جِئْتُ | எனக்கு சந்தோஷம் அளிக்கிறது/ அளிக்கும் | يَسُرُّنِي |
| நான் கல்வி கற்பதற்காக | كَيْ أَتَعَلَّمَ | நீ எம்மை சந்திப்பது | أَنْ تَزُوْرَنَا |
| நான் வெளியில் சென்றேன் | خَرَجْتُ | நிச்சயமாக நான் பொய் சொல்ல மாட்டேன் | لَنْ أَكْذِبَ |
| நான் சுற்றிப் பார்ப்பதற்காக | كَيْ أَتَـنَـزَّهَ | நிச்சயமாக வெற்றிபெற மாட்டான் | لَنْ يَفُوْزَ |
| கல்வி கற்கிறேன்/ கற்பேன் | أَتَعَلَّمُ | சோம்பேறி | كَسْلَانٌ |
| நான் சேவை செய்வதற்காக | كَيْ أَخْدُمَ | நிச்சயமாக நான் அடிக்க மாட்டேன் | لَنْ أَضْرِبَ |
| நாடு | اَلْوَطَنُ | பூனை | قِطٌّ |

**விளக்கம்:**

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் வரக்கூடிய நிகழ்கால, வருங்கால வினைச்சொற்கள் அனைத்தும் தனியாக வரும்பொழுது رَفْعٌ வரும். ஆனால் இவற்றுக்கு முன்பு

أَنْ لَنْ كَيْ اِذَنْ

என்னும் இடைச் சொற்கள் வந்துள்ளதால் நிகழ்கால, வருங்கால வினைச்சொல்லுக்கு نَصْبٌ உடைய அடையாளமாக فَتْحَةٌ (ـَـ) வந்துள்ளது.

**குறிப்பு:** நிகழ்கால, வருங்கால வினைச்சொல்லின் கடைசி எழுத்தில்தான் அடையாளங்கள் வரும். உதாரணம்:

| | |
|---|---|
| நான் நன்றாக செய்து கொண்டிருக்கிறேன்/நான் நன்றாக செய்வேன் | اُحْسِنُ |
| நான் நன்றாக செய்வது (மூலப் பொருள் - مَصْدَرٌ) | اَنْ اُحْسِنَ |

| | |
|---|---|
| நீ செய்கிறாய் / நீ செய்வாய் | تَفْعَلُ |
| நீ செய்வது / உன் செயல் (மூலப் பொருள்) | اَنْ تَفْعَلَ |

--------------------------

# جَزْمُ الْفِعْلِ الْمُضَارِعِ

**நிகழ்கால, வருங்கால வினைச் சொல்லுக்கு جَزْمٌ உடைய அடையாளமாக سُكُوْنٌ (ـْـ) வருதல்!**

اَلْقَوَاعِدُ:

**يُجْزَمُ الْفِعْلُ الْمُضَارِعُ إِذَا سَبَقَهُ حَرْفٌ جَازِمٌ كَالْحُرُوْفِ الْآتِيَةِ، وَهِيَ:**

**لَمْ، وَلَا النَّاهِيَةُ، وَإِنْ.**

**لَمْ، وَلَا النَّاهِيَةُ تَجْزِمَانِ فِعْلاً مُضَارِعاً وَاحِدًا، وَالْحَرْفُ الْأَوَّلُ يَنْفِى حُصُوْلَ الْفِعْلِ فِى الْمَاضِى، وَالثَّانِى يَنْهَى عَنْ عَمَلِ الْفِعْلِ.**

**إِنْ، تَجْزِمُ فِعْلَيْنِ، وَتُفِيْدُ أَنَّ حُصُوْلَ الْفِعْلِ الْأَوَّلِ شَرْطٌ فِى حُصُوْلِ الْفِعْلِ الثَّانِي.**

**சட்டங்கள்:**

நிகழ்கால, வருங்கால வினைச் சொல்லுக்கு முன்பாக لم لا إن இவை வரும்பொழுது வினைச்சொல்லின் கடைசி எழுத்தில் جَزْمٌ உடைய அடையாளமாக سُكُوْنٌ (ـْـ) வரும்.

**குறிப்பு:** مُضَارِعٌ என்னும் நிகழ்கால, வருங்கால வினைச்சொல்லுக்கு இடத்திற்குத் தகுந்தாற்போல் நிகழ்கால அல்லது வருங்கால அர்த்தம் கொள்ள வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செய்தால் | إِنْ | வேண்டாம் | لا | இல்லை | لَمْ |

இதில் لَمْ மற்றும் விலக்கலுக்குரிய لا ஒரே ஒரு مُضَارِعٌ ஆன வினைச்சொல்லுக்கு மட்டும் جَزْمٌ செய்யும்.

கடந்த காலத்தில் ஒரு செயல் நிகழவில்லை எனும் அர்த்தத்தை لَمْ கொடுக்கும்.

வருங்காலத்தில் ஒரு செயலை செய்யவேண்டாம் எனும் அர்த்தத்தை لا தரும்.

لَمْ க்கு உதாரணம்:

| | | |
|---|---|---|
| வருங்காலம் | அவன் மனனம் செய்வான் | يَحفَظُ |
| சென்றகாலம் | அவன் மனனம் செய்வில்லை | لَمْ يَحفَظْ |
| வருங்காலம் | அவன் சாப்பிடுவான் | يَأْكُلُ |
| சென்றகாலம் | அவன் சாப்பிடவில்லை | لَمْ يَأْكُلْ |

விலக்கலுக்குரிய لا வுக்கு உதாரணம்:

| | |
|---|---|
| நீ விளையாடுவாய் | تَلْعَبُ |
| நீ விளையாட வேண்டாம் | لَا تَلْعَبْ |
| அவன் சாப்பிடுவான் | يَأْكُلُ |
| அவன் சாப்பிட வேண்டாம் | لَا يَأْكُلْ |

இதில் اِنْ இரண்டு مُضَارِعٌ ஆன வினைச் சொல்லுக்கு جَزْمٌ செய்யும்.

மேலும் இரண்டாம் வினைச்சொல்லின் செயல் நிகழ முதலாம் வினைச்சொல்லின் செயல் நடந்திருப்பது அவசியம் என்பதையும் குறிக்கும்.

உதாரணம்:

إِنْ تَفْتَحْ نَوَافِذَ الْحُجْرَةِ يَتَجَدَّدْ هَوَاؤُهَا

அறையின் ஜன்னல்களை நீ திறந்தால் அறையில் உள்ள காற்று புதியதாகும் (தூய்மையாகும்).

இந்த உதாரணத்தில் அறைக்காற்று சுத்தமாக இருக்கவேண்டுமெனில் முதலில் உள்ள செயல் (அறையை திறப்பது) கட்டாயமாகும்.

**உதாரணங்கள்** **الأمثلة :**

| | |
|---|---|
| 1. முஹம்மது அவனுடைய பாடத்தை மனனம் செய்யவில்லை | ١- لَمْ يَحفَظْ مُحَمَّدٌ دَرْسَهُ |
| 2. மழை பெய்வது நிற்கவில்லை | ٢- لَمْ يَنْقَطِعْ نُزُوْلُ الْمَطَرِ |
| 3. திருடனை யாரும் பிடிக்கவில்லை | ٣- لَمْ يَقْبِضْ أَحَدٌ عَلَى اللِّصِّ |
| 4. நீ வயிறு நிரம்பியிருக்கும்போது சாப்பிடவேண்டாம். | ٤- لَا تَأْكُلْ وَأَنْتَ شَبْعَانٌ |
| 5. அதிகமாக சிரிக்காதே | ٥- لَا تُكْثِرْ مِنَ الضِّحْكِ |
| 6. விரைவாக செல்லாதே/விரைவாக நடக்காதே | ٦- لَا تُسْرِعْ فِي السَّيْرِ |
| 7. அறையின் ஜன்னல்களை நீ திறந்தால் அதன் காற்று தூய்மையாகும். | ٧- إِنْ تَفْتَحْ نَوَافِذَ الْحُجْرَةِ يَتَجَدَّدْ هَوَاؤُهَا |
| 8. (குளிர்) காற்று வீசும் இடத்தில் நீ அமர்ந்தால் நோயாளி ஆகிவிடுவாய் | ٨- إِنْ تَجْلِسْ فِي مَجْرَى الْهَوَاءِ تَمْرَضْ |
| 9. உனது சகோதரன் பயணம் செய்தால் நீயும் அவனோடு பயணம் செய்வாய் | ٩- إِنْ يُسَافِرْ أَخُوكَ تُسَافِرْ مَعَهُ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| நடையில் | فِي السَّيْرِ | மனனம் செய்யவில்லை | لَمْ يَحفَظْ |
| நீ திறந்தால் | إِنْ تَفْتَحْ | முஹம்மது | مُحَمَّدٌ |
| ஜன்னல்கள் | نَوَافِذُ | அவனுடைய பாடத்தை | دَرْسَهُ |
| அறை | اَلْحُجْرَةُ | நிற்கவில்லை | لَمْ يَنْقَطِعْ |

| | | | |
|---|---|---|---|
| புதியதாகும் | يَتَجَدَّدُ | பொழிவது | نُزُوْلُ |
| அதன் (அறையின்)காற்று | هَوَاؤُهَا | மழை | اَلْمَطَرُ |
| நீ அமர்ந்தால் | إِنْ تَجْلِسْ | பிடிக்கவில்லை | لَمْ يَقْبِضْ |
| வீசும் இடத்தில் | فِي مَجْرَى | யாரும் (ஒருவரும்) | أَحَدٌ |
| காற்று | اَلْهَوَاءُ | திருடனை | عَلَى اللِّصِّ |
| நீ நோயாளி ஆவாய் | تَمْرَضْ | நீ சாப்பிடவேண்டாம் | لَا تَأْكُلْ |
| அவன் பயணம் செய்தால் | إِنْ يُسَافِرْ | நீயுமோ | وَأَنْتَ |
| உனது சகோதரன் | أَخُوْكَ | வயிறு நிரம்பியவன் | شَبْعَانٌ |
| நீ பயணம் செய்வாய் | تُسَافِرُ | அதிகமாக்காதே | لَا تُكْثِرْ |
| அவனுடன் | مَعَهُ | சிரிப்பை | مِنَ الضِّحْكِ |
| | | விரைவாக்காதே | لَا تُسْرِعْ |

**விளக்கம்:**

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் مُضَارِعٌ ஆன வினைச் சொற்களாகிய

يَحْفَظْ يَنْقَطِعْ يَقْبِضْ

இவற்றுக்கு முன்னால் لَمْ என்பது வந்துள்ளதால் இவற்றின் கடைசி எழுத்தில் جَزْمٌ உடைய அடையாளமாக سُكُوْنٌ (ـْـ) வந்துள்ளது.

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் مُضَارِعٌ ஆன வினைச் சொற்களாகிய

تَأْكُلُ تُكْثِرُ تُسْرِعُ

இவற்றுக்கு முன்னால் **لا** என்பது வந்துள்ளதால் இவற்றின் கடைசி எழுத்தில் **جَزْمٌ** உடைய அடையாளமாக **سُكُوْنٌ** (ـْـ) வந்துள்ளது.

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் **مُضَارِعٌ** ஆன வினைச் சொற்களாகிய

تَفْتَحُ يَتَجَدَّدُ تَجْلِسُ تَمْرَضُ يُسَافِرُ تُسَافِرُ

இவற்றுக்கு முன்னால் **إِنْ** என்பது வந்துள்ளதால் இவற்றின் கடைசி எழுத்தில் **جَزْمٌ** உடைய அடையாளமாக **سُكُوْنٌ** (ـْـ) வந்துள்ளது.

**குறிப்பு:**

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் **إِنْ** என்பது மட்டும் இரண்டு **مُضَارِعٌ** ஆன வினைச்சொல்லுக்கு **جَزْمٌ** செய்துள்ளது.

-------------------------

# رَفْعُ الْفِعْلِ الْمُضَارِعِ

## நிகழ்கால, வருங்கால வினைச் சொல்லுக்கு رَفْعٌ உடைய அடையாளமாக ضَمَّةٌ (ـُـ) வருதல்

**اَلْقَاعِدَةُ:**

**يُرْفَعُ الْفِعْلُ الْمُضَارِعُ إِذَا لَمْ تَسْبِقْهُ أَدَاةٌ مِنْ أَدَوَاتِ النَّصْبِ أَوِ الْجَزْمِ.**

**சட்டம்:**

مُضَارِعٌ என்னும் நிகழ்கால, வருங்கால வினைச் சொல்லுக்கு முன்பாக جَزْمٌ அல்லது نَصْبٌ செய்யக்கூடிய எழுத்துக்கள் வரவில்லை யென்றால் நிகழ்கால, வருங்கால வினைச்சொல்லுக்கு رَفْعٌ வரும்.

**குறிப்பு:** مُضَارِعٌ என்னும் நிகழ்கால, வருங்கால வினைச்சொல்லுக்கு இடத்திற்குத் தகுந்தாற்போல் நிகழ்கால அல்லது வருங்கால அர்த்தம் கொள்ள வேண்டும்.

**உதாரணங்கள்** **الأمثلة :**

| | |
|---|---|
| 1. புறா பறக்கிறது | ١– تَطِيْرُ الْحَمَامَةُ |
| 2. பயணி திரும்புகிறார் | ٢– يَعُوْدُ الْمُسَافِرُ |
| 3. மேகங்கள் செல்கின்றன | ٣– تَسِيْرُ السُّحُبُ |
| 4. மழை இறங்குகிறது (பொழிகிறது) | ٤– يَنْزِلُ الْمَطَرُ |
| 5. புழுதி பறக்கிறது | ٥– يَثُوْرُ الْغُبَارُ |
| 6. நீதிபதி தீர்ப்பளிப்பார் | ٦– يَحْكُمُ الْقَاضِي |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| இறங்குகிறது (பொழிகிறது) | يَنْزِلُ | பறக்கிறது | تَطِيْرُ |
| மழை | اَلْمَطَرُ | புறா | اَلْحَمَامَةُ |
| பறக்கிறது | يَثُوْرُ | திரும்புகிறார் | يَعُوْدُ |
| புழுதி | اَلْغُبَارُ | பயணம் செய்பவர் | اَلْمُسَافِرُ |
| தீர்ப்பளிப்பார் | يَحْكُمُ | செல்கின்றது | تَسِيْرُ |
| நீதிபதி | اَلْقَاضِي | மேகங்கள் | اَلسُّحُبُ |

**விளக்கம்:**

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் உள்ள

تَطِيْرُ يَعُوْدُ تَسِيْرُ يَنْزِلُ يَثُوْرُ يَحْكُمُ

ஆகியவற்றில் مُضَارِعٌ ஆன வினைச் சொல்லுக்கு முன்பாக جَزْمٌ அல்லது نَصْبٌ செய்யக்கூடிய எழுத்துக்கள் எதுவுமில்லை.

எனவே இதற்கு رَفْعٌ செய்யப்பட்டுள்ளது. அதன் அடையாளமாக ضَمَّةٌ (ـُـ) வந்துள்ளது.

-------------------------

# كَانَ وَاَخَوَاتُهَا

## كَانَ என்ற வினைச்சொல்லும் அதன் சகோதரிகளும்

**اَلْقَوَاعِدُ:**

**تَدْخُلُ كَانَ عَلَى الْمُبْتَدَإِ وَالْخَبَرِ، فَتَرْفَعُ الْأَوَّلَ وَيُسَمَّى اِسْمَهَا وَتَنْصِبُ الثَّانِيَ وَيُسَمَّى خَبَرَهَا.**

**مِثْلُ كَانَ فِيمَا تَقَدَّمَ صَارَ، وَلَيْسَ، وَأَصْبَحَ، وَأَمْسَى، وَأَضْحَى، وَظَلَّ، وَبَاتَ، وَتُسَمَّى هٰذِهِ الْأَفْعَالُ أَخَوَاتِ كَانَ.**

**لِكُلِّ فِعْلٍ مِنْ هٰذِهِ الْأَفْعَالِ مُضَارِعٌ وَأَمْرٌ يَعْمَلَانِ عَمَلَ الْمَاضِي إِلَّا «لَيْسَ» فَلَا يَأْتِي مِنْهَا مُضَارِعٌ وَلَا أَمْرٌ.**

**சட்டங்கள்:**

كَانَ என்ற சென்றகால வினைச் சொல் مُبْتَدَأٌ என்னும் எழுவாய்க்கும் خَبَرٌ என்னும் பயனிலைக்கும் முன்பாக வரும்.

مُبْتَدَأٌ விற்கு رَفْعٌ வையும் خَبَرٌ க்கு نَصْبٌ வையும் ஏற்படுத்தும்.

مُبْتَدَأٌ வை كَانَ உடைய اِسْمٌ என்றும் خَبَرٌ வை كَانَ உடைய خَبَرٌ என்றும் சொல்லப்படும்.

كَانَ உடைய இலக்கண சட்டம்தான் பின்வருபவற்றுக்கு வரும்.

அவை:

**كَانَ، صَارَ، لَيْسَ، أَصْبَحَ، أَمْسَى، أَضْحَى، ظَلَّ، بَاتَ.**

| | | | |
|---|---|---|---|
| كَانَ | ஆனான்/ஆனது | أَمْسَى | மாலையில் ஆனான்/ஆனது |
| صَارَ | மாறினான்/மாறியது | أَضْحَى | முற்பகலில் ஆனான்/ஆனது |
| لَيْسَ | இல்லை | ظَلَّ | பகலில் ஆனான்/ஆனது |

| | | | |
|---|---|---|---|
| இரவில் ஆனான்/ஆனது | بَاتَ | காலையில் ஆனான்/ஆனது | أَصْبَحَ |

மேற்கூறப்பட்ட வினைச்சொற்களில் لَيْسَ வைத் தவிர மற்றவை அனைத்தும் مُضَارِعُ என்னும் நிகழ்கால, வருங்கால வினைச் சொற்களிலும் فِعْلُ الْأَمْرِ என்னும் ஏவல் வினைச் சொல்லிலும் வரும்.

**உதாரணங்கள் - 1** **الأمثلة :**

| | |
|---|---|
| 1. கூட்டம் நெரிசலாக உள்ளது | ١– اَلزِّحَامُ شَدِيْدٌ |
| 2. வீடு தூய்மையாக உள்ளது | ٢– اَلْبَيْتُ نَظِيْفٌ |
| 3. ஆடை சிறியதாக உள்ளது | ٣– اَلثَّوْبُ قَصِيْرٌ |
| 4. குளிர் கடுமையாக உள்ளது | ٤– اَلْبَرْدُ قَارِسٌ |
| 5. பணியாள் பலசாலியாக உள்ளான் | ٥– اَلْخَادِمُ قَوِيٌّ |
| 6. வேலையாள் உற்சாகமாக உள்ளான் | ٦– اَلعَامِلُ نَشِيْطٌ |
| 7. அதிகம் சாப்பிடுபவன் நோயாளியாக உள்ளான் | ٧– اَلنَّهِمُ مَرِيْضٌ |
| 8. தட்பவெட்ப நிலை மழை பெய்வதாக உள்ளது | ٨– اَلْجَوُّ مُمْطِرٌ |
| 9. வேலையாள் களைப்பாக உள்ளான் | ٩– اَلعَامِلُ مُتْعَبٌ |
| 10. பூ வாடியுள்ளது | ١٠– اَلزَّهْرُ ذَابِلٌ |
| 11. மேகம் அடர்த்தியாக உள்ளது | ١١– اَلْغَمَامُ كَثِيْفٌ |
| 12. தெரு நெரிசலாக உள்ளது | ١٢– اَلشَّارِعُ مُزْدَحِمٌ |
| 13. மழை அதிகமாக உள்ளது | ١٣– اَلْمَطَرُ غَزِيْرٌ |
| 14. புழுதி பறக்கிறது | ١٤– اَلْغُبَارُ ثَائِرٌ |

| | |
|---|---|
| 15. விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது | ١٥– اَلْمِصْبَاحُ مُتَّقِدٌ |
| 16. நோயாளி துன்பப்படுகிறார் | ١٦– اَلْمَرِيْضُ مُتَأَلِّمٌ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| களைப்பானவன் | مُتْعَبٌ | நெரிசல் | اَلزِّحَامُ |
| பூ | اَلزَّهْرُ | கடுமையானது | شَدِيْدٌ |
| வாடியுள்ளது | ذَابِلٌ | வீடு | اَلْبَيْتُ |
| மேகம் | اَلْغَمَامُ | தூய்மையானது | نَظِيْفٌ |
| அடர்த்தியானது | كَثِيْفٌ | ஆடை | اَلثَّوْبُ |
| தெரு | اَلشَّارِعُ | சிறியது/குட்டையானது | قَصِيْرٌ |
| நெரிசலாக உள்ளது | مُزْدَحِمٌ | குளிர் | اَلْبَرْدُ |
| மழை | اَلْمَطَرُ | கடுமையானது | قَارِسٌ |
| அதிகமானது | غَزِيْرٌ | பணியாளன் | اَلْخَادِمُ |
| புழுதி | اَلْغُبَارُ | பலசாலி | قَوِيٌّ |
| பறக்கக்கூடியது | ثَائِرٌ | வேலையாள் | اَلْعَامِلُ |
| விளக்கு | اَلْمِصْبَاحُ | உற்சாகமானவன் | نَشِيْطٌ |
| எரிகிறது | مُتَّقِدٌ | அதிகம் உண்பவன் | اَلنَّهِمُ |
| நோயாளி | اَلْمَرِيْضُ | நோயாளி | مَرِيْضٌ |
| துன்பப்படுபவன் | مُتَأَلِّمٌ | தட்பவெட்ப நிலை | اَلْجَوُّ |
| | | மழை பெய்யக்கூடியது | مُمْطِرٌ |

**உதாரணங்கள் - 2** **الأمثلة - 2**

| | |
|---|---|
| 1. நெரிசல் கடுமையாக ஆகியிருந்தது | ١–كَانَ الزِّحَامُ شَدِيدًا |
| 2. வீடு தூய்மையாக ஆகியிருந்தது | ٢–كَانَ الْبَيْتُ نَظِيفًا |
| 3. ஆடை சிறியதாக ஆகிவிட்டது/ மாறிவிட்டது | ٣– صَارَ الثَّوْبُ قَصِيرًا |
| 4. குளிர் கடுமையாக ஆகிவிட்டது/ மாறிவிட்டது | ٤– صَارَ الْبَرْدُ قَارِسًا |
| 5. பணியாள் பலசாலியாக இல்லை | ٥– لَيْسَ الْخَادِمُ قَوِيًّا |
| 6. வேலையாள் உற்சாகமாக இல்லை | ٦– لَيْسَ الْعَامِلُ نَشِيطًا |
| 7. அதிகம் உண்பவன் காலையில் நோயாளியானான் | ٧– أَصْبَحَ النَّهِمُ مَرِيْضًا |
| 8. தட்பவெட்ப நிலை காலையில் மழைபொழிவதாக இருந்தது | ٨– أَصْبَحَ الْجَوُّ مُمْطِرًا |
| 9. மாலையில் வேலையாள் களைப்படைந்து விட்டான் | ٩– أَمْسَى الْعَامِلُ مُتْعَبًا |
| 10. மாலையில் பூ வாடியது | ١٠– أَمْسَى الزَّهْرُ ذَابِلًا |
| 11. முற்பகலில் மேகம் அடர்த்தியானது | ١١– أَضْحَى الْغَمَامُ كَثِيْفًا |
| 12. முற்பகலில் வீதி கூட்டநெரிசலானது | ١٢– أَضْحَى الشَّارِعُ مُزْدَحِمًا |
| 13. பகலில் மழை அதிகமாக இருந்தது | ١٣– ظَلَّ الْمَطَرُ غَزِيْرًا |
| 14. பகலில் புழுதி பறந்தது | ١٤– ظَلَّ الْغُبَارُ ثَائِرًا |
| 15. இரவில் விளக்கு எரிந்தது | ١٥– بَاتَ الْمِصْبَاحُ مُتَّقِدًا |
| 16. இரவில் நோயாளி துன்பப்பட்டான் | ١٦– بَاتَ الْمَرِيْضُ مُتَأَلِّمًا |

**விளக்கம்:**

மேற்கூறப்பட்ட எண் ஒன்றில் உள்ள உதாரணங்களில் مُبْتَدَأٌ என்னும் எழுவாயும் خَبَرٌ என்னும் பயனிலை மட்டுமே வந்துள்ளது.

மேற்கூறப்பட்ட எண் இரண்டில் உள்ள உதாரணங்களில் مُبْتَدَأٌ விற்கும் خَبَرٌ விற்கும் முன்னால் كَانَ என்ற வினைச்சொல்லும் அதன் சகோதரிகளும் வந்து مُبْتَدَأٌ விற்கு رَفْعٌ உடைய அடையாளமாக ـُ வையும் خَبَرٌ விற்கு نَصْبٌ உடைய அடையாளமாக ـً வையும் ஏற்படுத்தியுள்ளது.

مُبْتَدَأٌ வை كَانَ உடைய اِسْمٌ என்றும் خَبَرٌ வை كَانَ உடைய خَبَرٌ என்றும் சொல்லவேண்டும்.

-------------------------

# إِنَّ وَاَخَوَاتُهَا

## إِنَّ வும் அதன் சகோதரிகளும்

**اَلْقَاعِدَةُ:**

**إِنَّ، وَأَنَّ، وَكَأَنَّ، وَلَكِنَّ، وَلَيتَ، وَلَعَلَّ تَدْخُلُ عَلَى الْمُبْتَدَإِ وَالْخَبَرِ.**
**فَتَنْصِبُ الْمُبْتَدَأَ وَيُسَمَّى اِسْمَهَا، وَتَرْفَعُ الْخَبَرَ وَيُسَمَّى خَبَرَهَا.**

**சட்டம்:**

**إِنَّ، أَنَّ، كَأَنَّ، لَكِنَّ، لَيتَ، لَعَلَّ**

இவையெல்லாம் مُبْتَدَأٌ என்னும் எழுவாய்க்கும் خَبَرٌ என்னும் பயனிலைக்கும் முன்னால் வந்து مُبْتَدَأٌ விற்கு نَصْبٌ வையும் خَبَرٌ க்கு رَفْعٌ வையும் ஏற்படுத்தும்.

مُبْتَدَأٌ வை إِنَّ உடைய اِسْمٌ என்றும் خَبَرٌ வை إِنَّ உடைய خَبَرٌ என்றும் சொல்லப்படும்.

| | | | |
|---|---|---|---|
| என்றாலும் | لَكِنَّ | நிச்சயமாக | إِنَّ |
| வேண்டுமே. ஒரு செயல் நடை பெறுவது எதிர் பார்க்கப்படும். (இது நடக்க சாத்தியமுள்ள மற்றும் சாத்தியமற்ற இரண்டிலும் பயன்படுத்தப்படும்) | لَيتَ | நிச்சயமாக | أَنَّ |
| இருக்கலாம். ஒரு செயல் நடை பெறுவது எதிர் பார்க்கப்படும். (இது நடக்க சாத்தியமுள்ளதில் மட்டும் பயன்படுத்தப்படும்) | لَعَلَّ | நிச்சயமாக போன்றுள்ளது | كَأَنَّ |

**உதாரணங்கள் - 1** **الأمثلة :**

| | |
|---|---|
| 1. ஒட்டகம் சாதுவானது | ١– اَلْجَمَلُ صَبُورٌ |
| 2. பிரமீடு பழமையானது | ٢– اَلْهَرَمُ قَدِيمٌ |

| | |
|---|---|
| 3. தேர்வு அருகில் உள்ளது | ٣– اَلْإِمْتِحَانُ قَرِيْبٌ |
| 4. மலர் மலர்ந்துள்ளது | ٤– اَلزَّهْرَةُ نَاضِرَةٌ |
| 5. புத்தகம் ஓர் ஆசிரியராகும் | ٥– اَلْكِتَابُ أُسْتَاذٌ |
| 6. நிலவு ஒரு விளக்காகும் | ٦– اَلْقَمَرُ مِصْبَاحٌ |
| 7. வீட்டுச் சாமான்கள் பழையது | ٧– اَلْأَثَاثُ قَدِيْمٌ |
| 8. பாதிப்புகள் குறைவானது | ٨– اَلْخَسَائِرُ قَلِيْلَةٌ |
| 9. பழம் பழுத்துள்ளது | ٩– اَلْفَاكِهَةُ نَاضِجَةٌ |
| 10. சந்திரன் உதயமாகியுள்ளது | ١٠– اَلْقَمَرُ طَالِعٌ |
| 11. புத்தகம் விலை மலிவானது | ١١– اَلْكِتَابُ رَخِيْصٌ |
| 12. நோயாளி தூங்குகிறார் | ١٢– اَلْمَرِيْضُ نَائِمٌ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| வீட்டுச் சாமான்கள் | اَلْأَثَاثُ | ஒட்டகம் | اَلْجَمَلُ |
| பழையது | قَدِيْمٌ | சாதுவானது | صَبُوْرٌ |
| பாதிப்புகள் | اَلْخَسَائِرُ | பிரமீடு | اَلْهَرَمُ |
| குறைவானது | قَلِيْلَةٌ | பழையது | قَدِيْمٌ |
| பழம் | اَلْفَاكِهَةُ | தேர்வு | اَلْإِمْتِحَانُ |
| பழுத்தது | نَاضِجَةٌ | அருகில் உள்ளது | قَرِيْبٌ |
| சந்திரன் | اَلْقَمَرُ | பூ | اَلزَّهْرَةُ |

| | | | |
|---|---|---|---|
| உதயமானது | طَالِعٌ | மலர்ந்துள்ளது | نَاضِرَةٌ |
| விலை மலிவானது | رَخِيْصٌ | புத்தகம் | اَلْكِتَابُ |
| நோயாளி | اَلْمَرِيْضُ | ஆசிரியர் | أُسْتَاذٌ |
| தூங்குபவன் | نَائِمٌ | சந்திரன் | اَلْقَمَرُ |
| | | விளக்கு | مِصْبَاحٌ |

**உதாரணங்கள் - 2**      **الأمثلة :**

| | |
|---|---|
| 1. நிச்சயமாக ஒட்டகம் சாதுவானது | ١– إِنَّ الْجَمَلَ صَبُوْرٌ |
| 2. நிச்சயமாக பிரமீடு பழமையானது | ٢– إِنَّ الْهَرَمَ قَدِيْمٌ |
| 3. நிச்சயமாக தேர்வு அருகில் உள்ளது என்பதை அறிந்து கொண்டேன் | ٣– عَلِمْتُ أَنَّ الْإِمْتِحَانَ قَرِيْبٌ |
| 4. நிச்சயமாக மலர் மலர்ந்துள்ளது எனக்கு சந்தோஷமளிக்கிறது | ٤– يَسُرُّنِي أَنَّ الزَّهْرَةَ نَاضِرَةٌ |
| 5. நிச்சயமாக புத்தகம் ஓர் ஆசிரியரைப் போன்றுள்ளது | ٥–كَأَنَّ الْكِتَابَ أُسْتَاذٌ |
| 6. நிச்சயமாக சந்திரன் ஒரு விளக்கைப் போன்றுள்ளது | ٦– كَأَنَّ الْقَمَرَ مِصْبَاحٌ |
| 7. வீடு புதியது என்றாலும் வீட்டுச் சாமான்கள் பழையவை | ٧– اَلْبَيْتُ جَدِيْدٌ لَكِنَّ الْأَثَاثَ قَدِيْمٌ |
| 8. நெருப்பு பற்றி எரிந்தது என்றாலும் பாதிப்புகள் குறைவு | ٨– شَبَّتِ النَّارُ لَكِنَّ الْخَسَائِرَ قَلِيْلَةٌ |
| 9. பழம் பழுக்க வேண்டுமே! | ٩– لَيْتَ الْفَاكِهَةَ نَاضِجَةٌ |
| 10. சந்திரன் உதயமாக வேண்டுமே! | ١٠– لَيْتَ الْقَمَرَ طَالِعٌ |

| | |
|---|---|
| 11. புத்தகம் விலை மலிவாக இருக்கலாம்! | ١١– لَعَلَّ الْكِتَابَ رَخِيْصٌ |
| 12. நோயாளி தூங்கிக் கொண்டு இருக்கலாம்! | ١٢– لَعَلَّ الْمَرِيْضَ نَائِمٌ |

**விளக்கம்:**

மேற்கூறப்பட்ட எண் ஒன்றில் உள்ள உதாரணங்களில் مُبْتَدَأٌ மற்றும் خَبَرٌ வந்துள்ளது.

மேற்கூறப்பட்ட எண் இரண்டில் உள்ள உதாரணங்களில்

إِنَّ، أَنَّ، كَأَنَّ، لَكِنَّ، لَيْتَ، لَعَلَّ

இவையெல்லாம் مُبْتَدَأٌ என்னும் எழுவாய்க்கும் خَبَرٌ என்னும் பயனிலைக்கும் முன்னால் வந்து مُبْتَدَأٌ விற்கு نَصْبٌ உடைய அடையாளமாக ـَـ வையும் خَبَرٌ க்கு رَفْعٌ உடைய அடையாளமாக ـٌـ வையும் ஏற்படுத்தியிருக்கிறது.

مُبْتَدَأٌ வை إِنَّ உடைய اِسْمٌ என்றும் خَبَرٌ வை إِنَّ உடைய خَبَرٌ என்றும் சொல்லப்படும்.

--------------------------

# جَرُّ الْإِسْمِ

## பெயர்ச்சொல்லுக்கு جَرٌّ உடைய அடையாளமாக كَسْرَةٌ (ـِ / ـٍ) வருதல்

اَلْقَاعِدَةُ:

**يُجَرُّ الْاِسْمُ إِذَا سَبَقَهُ حَرْفٌ مِنْ حُرُوْفِ الْجَرِّ الْآتِيَةِ وَهِيَ: مِنْ، وَإِلَى، وَعَنْ، وَعَلَى، وَفِي، وَالْبَاءُ، وَاللَّامُ.**

**சட்டம்:**

பெயர்ச்சொல்லுக்கு முன்னால்

**مِنْ، إِلٰى، عَنْ، عَلٰى، فِي، اَلْبَاءُ، اَللَّامُ**

இவற்றில் ஏதாவது ஒன்று வந்தால் அப்பொழுது பெயர்ச் சொல்லின் கடைசி எழுத்தில் جَرٌّ வரும்.

**உதாரணங்கள் - 1** **الأمثلة :**

| | |
|---|---|
| 1. வானிலிருந்து மழை இறங்கியது | ١– نَزَلَ الْمَطَرُ مِنَ السَّمَاءِ. |
| 2. கடலிலிருந்து மீன் வருகிறது | ٢– يَأْتِي السَّمَكُ مِنَ الْبَحْرِ. |
| 3. மைதானத்தின் பக்கம் படை விரைந்தது | ٣– سَعَى الْجَيْشُ إِلَى الْمَيْدَانِ. |
| 4. வயலின் பக்கம் கால்நடை சென்றது | ٤– سَارَتِ الْمَاشِيَةُ إِلَى الْحَقْلِ. |
| 5. குதிரையை விட்டு படை வீரன் இறங்குகிறான் | ٥– يَنْزِلُ الْجُنْدِيُّ عَنِ الْحِصَانِ. |
| 6. குழந்தையை பற்றிய பயம் நீங்கும் | ٦– يَذْهَبُ الْخَوْفُ عَنِ الطِّفْلِ. |
| 7. தண்ணீரின் மீது கட்டை மிதக்கிறது | ٧– يَطْفُو الْخَشَبُ عَلَى الْمَاءِ. |
| 8. பழம் பூமியின் மீது விழும் | ٨– يَسْقُطُ الثَّمَرُ عَلَى الْأَرْضِ. |

| | |
|---|---|
| 9. தோட்டத்தில் நாய் குறைக்கிறது | ٩- يَنْبَحُ الْكَلْبُ فِي الْبُسْتَانِ. |
| 10. குற்றவாளி சிறையில் நுழைந்தான் | ١٠- دَخَلَ الْمُجْرِمُ فِي السِّجْنِ. |
| 11. கத்தியைக் கொண்டு பழத்தின் தோலை உறித்தேன் | ١١- قَشَرْتُ الْفَاكِهَةَ بِالسِّكِّيْنِ. |
| 12. வாட்களைக் கொண்டு படைகள் சண்டையிடும் | ١٢- يَتَقَاتَلُ الْجُنُوْدُ بِالسُّيُوْفِ. |
| 13. பரிசு முதலில் வந்தவனுக்குரியது | ١٣- اَلْجَائِزَةُ لِلسَّابِقِ. |
| 14. நான் கருவூலத்திற்காக பூட்டை வாங்கினேன் | ١٤- اِشْتَرَيْتُ قُفْلًا لِلْخِزَانَةِ. |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| விழுகிறது | يَسْقُطُ | இறங்கியது | نَزَلَ |
| பழம் | اَلثَّمَرُ | வானத்திலிருந்து | مِنَ السَّمَاءِ |
| பூமியின் மீது | عَلَى الْأَرْضِ | வரும் | يَأْتِي |
| குறைக்கிறது | يَنْبَحُ | மீன் | اَلسَّمَكُ |
| நாய் | اَلْكَلْبُ | கடலிலிருந்து | مِنَ الْبَحْرِ |
| தோட்டத்தில் | فِي الْبُسْتَانِ | விரைந்தது | سَعَى |
| நுழைந்தான் | دَخَلَ | படை | اَلْجَيْشُ |
| குற்றவாளி | اَلْمُجْرِمُ | மைதானத்தின் பக்கம் (மைதானத்தை நோக்கி) | إِلَى الْمَيْدَانِ |
| சிறையில் | فِي السِّجْنِ | சென்றது | سَارَتْ |
| தோல் உறித்தேன் | قَشَرْتُ | கால்நடை | اَلْمَاشِيَةُ |

| | | | |
|---|---|---|---|
| பழம் | اَلْفَاكِهَةُ | வயலின் பக்கம் (வயலை நோக்கி) | إِلَى الْحَقْلِ |
| கத்தியைக் கொண்டு | بِالسِّكِّيْنِ | இறங்குகிறான் | يَنْزِلُ |
| சண்டையிடும் | يَتَقَاتَلُ | படைவீரன் | اَلْجُنْدِيُّ |
| படைகள் | اَلْجُنُوْدُ | குதிரையை விட்டு | عَنِ الْحِصَانِ |
| வாட்களைக் கொண்டு | بِالسُّيُوْفِ | செல்கிறது/நீங்குகிறது | يَذْهَبُ |
| பரிசு | اَلْجَائِزَةُ | பயம் | اَلْخَوْفُ |
| முதலில் வந்தவனுக்கு | لِلسَّابِقِ | குழந்தையை விட்டு | عَنِ الطِّفْلِ |
| நான் வாங்கினேன் | اِشْتَرَيْتُ | மிதக்கிறது | يَطْفُو |
| பூட்டு | قُفْلٌ | கட்டை | اَلْخَشَبُ |
| கருவூலத்திற்காக | لِلْخِزَانَةِ | தண்ணீரின் மீது | عَلَى الْمَاءِ |

**விளக்கம்:**

மேலுள்ள உதாரணங்களில்

مِنْ، إِلٰى، عَنْ، عَلٰى، فِي، اَلْبَاءُ، اَللَّامُ

இவை பெயர்ச்சொற்களுக்கு முன்னால் வந்துள்ளதால் பெயர் சொற்களின் கடைசி எழுத்தில் جَرٌّ உடைய அடையாளமாக كَسْرَةٌ (ـِـ) வந்துள்ளது.

-------------------------

# اَلنَّعْتُ

## வர்ணித்தல்

**اَلْقَوَاعِدُ:**

**اَلنَّعْتُ لَفْظٌ يَدُلُّ عَلَى صِفَةٍ فِي اِسْمٍ قَبْلَهُ، وَيُسَمَّى الْاِسْمُ الْمَوْصُوفُ مَنْعُوْتًا.**

**اَلنَّعْتُ يَتْبَعُ الْمَنْعُوتَ فِي رَفْعِهِ وَنَصْبِهِ وَجَرِّهِ.**

**சட்டம்:**

**نَعْتٌ** என்பது ஒரு வார்த்தை. அது தனக்கு முன் வந்துள்ள பெயர்ச்சொல்லில் உள்ள பண்பை அறிவிக்கும் (வர்ணிக்கும்).

**نَعْتٌ** மூலம் வர்ணிக்கப்பட்ட அந்தப் பெயர்ச்சொல்லுக்கு **مَنْعُوْتٌ** என்று சொல்லப்படும்.

**نَعْتٌ** என்பது **اِعْرَابٌ** (رَفْعٌ، نَصْبٌ، جَرٌّ) விசயத்தில் **مَنْعُوْتٌ** –தை பின்பற்றும். அதாவது **مَنْعُوْتٌ** உடைய **اِعْرَابٌ** தான் **نَعْتٌ** க்கு வரும்

**نَعْتٌ** என்பதற்கு **صِفَةٌ** என்றும் **مَنْعُوْتٌ** என்பதற்கு **مَوْصُوْفٌ** என்றும் வேறு பெயர்கள் உள்ளன.

**உதாரணங்கள்:** **الأمثلة :**

| | |
|---|---|
| 1. இது பயனுள்ள புத்தகம் | ١– هٰذَا كِتَابٌ مُفِيْدٌ |
| 2. பயனுள்ள புத்தகத்தை படித்தேன் | ٢– قَرَأْتُ كِتَابًا مُفِيْدًا |
| 3. பயனுள்ள புத்தகத்தில் பார்த்தேன் | ٣– نَظَرْتُ فِي كِتَابٍ مُفِيْدٍ |
| 1. இது விசாலமான மைதானம் | ١– هٰذَا مَيْدَانٌ فَسِيْحٌ |
| 2. விசாலமான மைதானத்தைப் பார்த்தேன் | ٢– رَأَيْتُ مَيْدَانًا فَسِيْحًا |
| 3. விசாலமான மைதானத்தில் ஓடினேன் | ٣– جَرَيْتُ فِي مَيْدَانٍ فَسِيْحٍ |

| | |
|---|---|
| 1. அழகிய ரோஜா மலர்ந்தது | ١– تَفَتَّحَتِ الْوَرْدَةُ الْجَمِيْلَةُ |
| 2. அழகிய ரோஜாவைப் பறித்தேன் | ٢– قَطَفْتُ الْوَرْدَةَ الْجَمِيْلَةَ |
| 3. அழகிய ரோஜாவைப் பார்த்தேன் | ٣– نَظَرْتُ إِلَى الْوَرْدَةِ الْجَمِيْلَةِ |

**தனித்தனி வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும்**

| | | | |
|---|---|---|---|
| பார்த்தேன் | رَأَيْتُ | இது | هٰذَا |
| ஓடினேன் | جَرَيْتُ | புத்தகம் | كِتَابٌ |
| மலர்ந்தது | تَفَتَّحَتْ | பயனுள்ளது | مُفِيْدٌ |
| ரோஜா | اَلْوَرْدَةُ | பார்த்தேன் | نَظَرْتُ |
| அழகானது | جَمِيْلَةٌ | மைதானம் | مَيْدَانٌ |
| பறித்தேன் | قَطَفْتُ | விசாலமானது | فَسِيْحٌ |

**விளக்கம்:**

மேற்கூறப்பட்ட உதாரணங்களில் نَعْتٌ என்று சொல்லப்படும் مُفِيْدٌ فَسِيْحٌ جَمِيْلَةٌ எனும் வார்த்தைகள் இவற்றுக்கு முன்னால் வந்துள்ள வார்த்தைகளான اَلْوَرْدَةُ مَيْدَانٌ كِتَابٌ ஆகியவற்றின் பண்புகளை வர்ணித்துள்ளது.

வர்ணிக்கப்பட்ட வார்த்தைக்கு مَنْعُوْتٌ என்று சொல்லப்படும்.

மேலும் نَعْتٌ மற்றும் مَنْعُوْتٌ ஆகிய இரண்டுக்கும் ஒரே மாதிரியான அடையாளக் குறியீடுகள் வந்துள்ளதை உதாரணங்களில் காணலாம்.

-------------------------